

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம் சந்திரப்பாடி கிராமத்தில்; ரூ.32 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்கான கட்டுமானப் பணி தொடக்க விழாவில் 40 சதவீதம் மானியத்துடன் ரூ.75,681 மதிப்பில் குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய இருசக்கர வாகனங்களை 9 நபர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பயனாளிகளுக்கு வழங்கினார். உடன்மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா.முருகன்,மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதிசட்டமன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை ராஜ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம் எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றிய செயலாளர் எம்.அப்துல் மாலிக், பி.எம். அன்பழகன், அமிர்த. விஜயகுமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், பெலவர்த்தி ஊராட்சி, வள்ளுவர்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட திட்ட முகாமில், பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் பல்வகை தொழில்நுட்ப

# கல்வி ஆசிரியர்களுக்கு புதிய பாடத் திட்டத்திற்கான பயிற்சி!

### உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்தார்!

தஞ்சை, பிப். 14-

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் பல்வகை தொழில்நுட்ப கல்வி ஆசிரியர்களுக்கு புதிய பாடதிட்டத்திற்கான பயிற்சியினை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று முன்தினம் (12.02.2025) துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவர் விஜயகுமார், (ஓய்வு), தொழில்நுட்ப இயக்க ஆணையர் இன்னசென்ட் திவ்யா, மாவட்ட ஆட்சித்தலைவர் பா. பிரியங்கா பங்கஜம்,தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் பல்வகை தொழில்நுட்ப கல்வி ஆசிரியர்களுக்கு புதிய பாடதிட்டத்திற்கான பயிற்சி இன்று நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கை உயர்த்தப்பட வேண்டும் என்றும் கல்லூரியில் சேரும் அனைத்து மாணவர்களுக்கும் சென்றடைய வேண்டிய திறன்கள் அனைத்தும் செல்வது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் உயர்கல்வி துறைக்கு கட்டளை இட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் பாலிடெக்னிக் கல்லூரிகளின் கலைத்திட்டமும் பாடத்திட்டமும் புதிதாக மறுசீரமைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பணி தொழில் முனைவோருடனும் பல்கலைக்கழக பேராசிரியர்களுடனும் கலந்து இரண்டு ஆண்டுகளாக நடைபெற்றது. 2023 ஆம் வருடத்தில் பணி நிறைவுற்று பாடத் திட்டமும் கலைத்திட்டமும் அமல்படுத்தப்பட்டது.

ஒரு பாடத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு முழு பயனும் மாணவர்களுக்கு சென்றடைய வேண்டுமென்றால் அந்த பாடத்திட்டம் ஆசிரியர்களால், விரிவுரையாளர்களால் நல்ல முறையில் கையாளப்பட வேண்டும். இதற்காக பாலிடெக்னிக் கல்லூரிவிரிவுரையாளர்கள் அனைவருக்கும் பயிற்சி தர வேண்டியது அவசியம் ஆகிறது. நல்ல முறையில் பயிற்சி அளித்தால்தான் பாடத்திட்டம் மற்றும் கலைத்திட்டம் மறு சீரமைக்கப்பட்டதன் முழு பயனும் அனைத்து மாணவர்களையும் சென்றடையும்.

கற்றலின் விளைவு, மாணவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் அப்பொழுதுதான் அவர்கள் கற்ற கல்வியின் பயனை முழுவதுமாக அவர்கள் உணர்ந்து அனுபவிக்க முடியும். இது மாணவர்களை மையப்படுத்தும் ஒரு அணுகுமுறை.

கற்றலின் விளைவாக மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு உடனடியாக உறுதி செய்யப்பட வேண்டும். அவ்வாறு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட வேண்டுமானால் பாடத்திட்டத்திலும் கலைத்திட்டத்திலும் குறிப்பிட்டுள்ள அனைத்து திறன்களும் அனைத்து மாணவர்களுக்கும் சென்று சேர வேண்டும். சீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை முறையாக செயல்படுத்தப்படும் போது ஒரு மாணவன் பட்டய படிப்பை முடித்தவுடன் வேலை வாய்ப்பில் சேர்வதற்கு தகுதி உடையவன் ஆவான்.

குறிப்பாக பாலிடெக்னிக் கல்லூரியில் சேரும் மாணவர்கள் பெரும்பாலும் சமூகத்திலும் பின் தங்கியவர்களாகவும் பிற்படுத்தப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். திராவிட மாடல் அரசு சமூகநீதி உறுதி செய்யும் பொருட்டு இந்த மாணவர்களுக்காக தனி கவனம் செலுத்தி பாடத்திட்டம் கலைத்திட்டம் முழுவதுமாக சீரமைத்து தரமான கல்வி வழங்குவதற்கு வழி வகுக்கிறது.

இப்பயிற்சி தொடர் பயிற்சியாக பாலிடெக்னிக் கல்லூரி விரிவுரையாளர்கள் சுமார் 1500 பேருக்கும் சென்றடையும் வண்ணம் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சியில் முதற்கட்டமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 90 விரிவுரை யாளர்களுக்கு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் அரசினர் பல்தொழில்நுட்ப பயிலகம், வலங்கைமான் முதல்வர் லூ.ஜான் லூயிஸ், தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தின் பாடத்திட்ட வரைவு தனி அலுவலர் பெ.திலகராஜ் மற்றும் பல்தொழில்நுட்ப பயிலக ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### சீர்காழி நகர இளைஞரணி அமைப்பாளர்

# எம்.ஆர்.ஆர். ராஜசேகரன் மறைவு!

### கழகத்தினர் நேரில் அஞ்சலி!

மயிலாடுதுறை, பிப். 14-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர கழக முன்னாள் பொறுப்பாளர் மறைந்த எம்.ஆர்.ராதா மகனும், பொறியாளர் எம்.ஆர்.ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி முன்னாள் துணைச் செயலாளர் எம்.ஆர். ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் சகோதரரும், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரிராஜசேகரன் கணவரும் சீர்காழி நகர இளைஞரணி அமைப்பாளருமான எம்.ஆர்.ஆர்.ராஜசேகரன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த எம்.ஆர்.ஆர். ராஜசேகரனுக்கு மனைவி துர்கா பரமேஸ்வரி ராஜசேகரன் உள்ளார். சீர்காழியில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த எம்.ஆர்.ஆர். ராஜசேகரன் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழக்கடை கி. ஜெயராமன்

### பிப்ரவரி 14 (1985)



சென்னை, தியாகராய நகர் பகுதிக் கழகச் செயலாளராக தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் ஓராண்டு காலம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். சிறைப்பறவை என்றும் அஞ்சாநெஞ்சன் என்றும் தலைவரால் பாராட்டப்பட்டவர்.

"ஒரு தொண்டனுடைய படத்தை நான் திறந்து வைத்ததாக கருதவில்லை. ஒரு தலைவனுடைய படத்தை ஒரு தொண்டன் திறந்து வைத்திருக்கிறேன் என்று கருதிக் கொள்ள வேண்டும்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

### ரூ.21 லட்சம் மதிப்பீட்டில்

# பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இ-சேவை மையம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் – ஆ.இராசா.எம்.பி. திறந்து வைத்து, இணைய வழி சான்றுகளை பயனாளிக்கு வழங்கினர்!

பெரம்பலூர், பிப். 14-

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு இ - சேவை மைய கட்டிடத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி சிவசங்கர், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., ஆகியோர் ரிப்பன் வெட்டி, திறந்து வைத்தனர். முன்னதாக அங்கு வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் அரசு இ - -சேவை மைய செயல்பாட்டினை போக்குவரத்துத் துறை அமைச்சர், மேனாள் ஒன்றிய அமைச்சர் இருவரும் பார்வையிட்டு, இணைய வழி சான்றினை பயனாளிக்கு வழங்கினார்கள்.

அரசின் சேவைகள் எளிதாகவும்,விரைவாகவும் கிடைத்திடும் வகையில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக அரசு இ - சேவை மையங்களை நடத்திவருகிறது. இச்சேவையினை பொதுமக்களுக்கு எளிதில் கிடைத்திடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 234 - சட்டப்பேரவை உறுப்பினர்களின் அலுவலகங்களிலும் இ-சேவைமையங்கள் அமைத்திடவும், அம்மையங்களுக்கான நவீன மேசைகணினிகள் வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.அதன் அடிப்படையில் பெரம்பலூர் சட்டமன்ற அலுவலகம் அருகில் பெரம்பலூர்சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.21 லட்சம் மதிப்பீட்டில்புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு இசேவை மைய கட்டிடத்தை போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களும்,நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும்,இன்று திறந்து வைத்து அரசு இ - சேவை மையத்தின் மூலமாகஇலவசமாக இணைய வழி சான்றினை பயனாளிக்கு வழங்கினார்கள். இந்த இ-சேவைமையத்தில் சிறு, குறு விவசாயி சான்றிதழ், ஓய்வூதியத்திட்டம், விதவைச் சான்று, சாதிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் வருவாய்த்துறையின் சான்றிதழ்கள், சமூக நலத்துறையின் திருமண நிதியுதவி திட்டம், இணைய வழி பட்டா மாறுதல், முதல் தலைமுறை பட்டதாரிக்கான சான்றிதழ்கள், கலப்புத்திருமண சான்றிதழ்கள், சொத்து மதிப்பு சான்றிதழ்கள், இரண்டுபெண் குழந்தைகளுக்கான சான்றிதழ்கள் உள்பட அனைத்து திட்டங்க ளுக்கும் இணையவழி சான்றுகளை இலவசமாக பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், நகராட்சி தலைவர் அம்பிகா ராஜேந்திரன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கவிதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ராஜ்குமார், பெரம்பலூர் வட்டாட்சியர் சரவணன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கல்வியை எப்படியாவது கொடுத்துவிட்டால் போதும் என

# மாணவச் செல்வங்களுக்காக திட்டங்களை செயல்படுத்துகிறார் முதல்வர்!

### அறந்தாங்கி – வெண்ணாவல்குடியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை, பிப். 14-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் மெல்லக்கற்கும் மாணாக்கர்களும் தேர்வில் எளிதில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் எமது நிதிப் பங்களிப்புடன் மிகவும் எளிமையாக புரிந்து கொண்டு பயிலும் வகையில் வடிவமைக்கப்பட்ட சிறப்பு கையேட்டினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் மாணவ மாணவிகளுக்கு வழங்கி உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் பேசியதாவது:

கல்வியை கொடுப்பதற்காக ஆசிரிய பெருமக்கள் 365 நாட்களும் தங்களது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் பயிற்றுவிக்கின்றார்கள். அதற்காக ஆசிரிய பெருமக்களுக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவச் செல்வங்களுக்கு கல்வியை கொடுத்து விட்டால் எதிர்காலத்தில் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. விழா அரங்கம் மாணவர் விடுதி வேண்டும் என கோரிக்கை வைத்தார்கள். அவை நிறைவேற்றப்படும். மின்சார வசதி ஆழ்குழாய் கிணறு வசதி ஏற்படுத்தப்படும். முன்பெல்லாம் பள்ளிகளில் காய்கறி தோட்டமிருக்கும். மூலிகை தோட்டமிருக்கும். நவீன உலகத்தில் அதை பார்க்க முடியவில்லை. அந்தத் தோட்டங்கள் இந்த பள்ளிக்கு உருவாக்கி தரப்படும்.

பிளஸ் 2 பயிலும் மாணவ மாணவியர்கள் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று உயர் கல்வி கற்பதற்காக சிறகடித்து பறக்க இருக்கின்றீர்கள். நீங்கள் உயர்கல்வி பயலுவதற்காக செல்கின்ற வேளையில் கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தி உயர வேண்டும். பாவேந்தர் பாரதிதாசன், பாரதியாரின் கூற்றுப்படி கல்வியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. போட்டித் தேர்வு மூலமாக நீங்கள் நல்ல வேலைக்கு செல்ல முடியும்.



பெண்கள் உயர் கல்வி பயில புதுமைப்பெண் திட்டம் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்கப்படுகிறது. நான் முதல்வன் திட்டம் நீங்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்திட்டத்தின்படி போட்டி தேர்வுக்கு செல்லும் போது மாதம் 7500 ரூபாய் வழங்கி உயர் பதவிகளுக்கு செல்ல உதவி செய்கின்ற முதல்வர் தான் நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கிராமப்புற பள்ளியில் இருந்து ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்ற ஆட்சி பணிக்கு செல்லும் மாணவர்களுக்கு கல்விச் செலவை அரசே ஏற்கின்ற அளவில் இத்திட்டத்தை நமது முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

மாணவச் செல்வங்களுக்கு கல்வியை கொடுத்து விட்டால் போதும் அவர்களது முன்னேற்றத்தை பற்றி கவலைப்பட தேவையில்லை என்ற அடிப்படையில்தான் முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் . கல்வியை கற்கும் போது சிலருக்கு கசப்பாக இருக்கலாம். ஆனால் அளவற்ற திறமைகள் ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது . அதை எது என்று கண்டறிந்து நீங்கள் வெளிப்படுத்தும் போது வெற்றியாளராக வருவீர்கள். அதற்கான சிறு உதவி தான் சிறப்பு கையேடுகள். உங்களுக்கு சிறப்பு கையேடு வழங்கப்பட்டிருக்கிறது. இதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேர்வுக்கு உதவும் வகையில் பள்ளிகளுக்கு நேரடியாக சென்று சிறப்பு கையேட்டினை வழங்கி வருகிறோம்.

அரசு பள்ளியில் படிக்கிறோம் எதிர்காலம் எப்படி இருக்கும் என்றெல்லாம் கவலைப்படாதீர்கள். இந்தியாவிற்கு பெருமை சேர்க்கும்வகையில்விண்கலத்தை செலுத்தியவர் அரசு பள்ளியில் படித்தவர் தான். ஒவ்வொருவரும் சாதனையாளராக மாற வேண்டும் என்பது எனது வேண்டுகோள் மாணவச் செல்வங்கள் எதிர்காலத்தில் எல்லா துறையிலும் சிறந்து விளங்க வேண்டும் என கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

நிகழ்வில் முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் கே.பி.கே.டி. தங்கமணி, அரு.வடிவேல் மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரிய, ஆசிரியைகள், கல்வித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தமிழ் பாரம்பரிய சிலம்பாட்ட சங்கம் இணைந்து 2025 கராத்தே மற்றும் சிலம்பம் நிகழ்ச்சி எஸ்.என்.எஸ். தொழில் நுட்பக்கல்லூரி வளாகம், வழியாம்பாளையத்தில் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி பரிசுகள் மற்றும் சான்றிதழ் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட துனைச்செயலாளர்கள் அசோக் ஆறுக்குட்டி எம்.என்.செந்தில் ,பகுதிக்கழக செயலாளர் பொன்னுசாமி, ஜார்ஜ், சிறவை சிவா ஒன்றிய செயலாளர் சுரேஷ்குமார் ,கவுன்சிலர் நவீன் , மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள். கலந்து கொண்டனர்.